செ.வெ.எண்: 52 நாள்:30.3.2020

## கரூர் மாவட்டம்

**கரூர் மாவட்டத்தில் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக காய்கறிகடைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தபின் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

பொதுமக்களின் வசதிக்காக கரூர் பேருந்து நிலையத்தில் தற்காலிக காய்கறி கடைகள் அமைக்கப்பட்டுள்ளதையும், திருவள்ளுவர் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள காய்கறி கடைகளையும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், இன்று (30.3.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

சமூக விலகல் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் வகையில், காய்கறிகடைகளின் முன்புறம் ஒரு மீட்டர் இடைவெளியில் வரிசையாக வட்டங்கள் போடப்பட்டிருந்தது. வருகை தந்த வாடிக்கையாளர்கள் சமூக விலகலைக் கடைபிடித்து காய்கறிகளை வாங்கிச்செல்வதை பார்வையிட்ட மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், தங்கு தடையின்றி பொருட்கள் வரப்பெறுகின்றதா என்றும் வியாபாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும், பொருட்கள் வருவதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரித்தால் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்டும் என்று வியாபாரிகளிடம் அறிவுறுத்தினார்.

பின்னர் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்காக மாண்புமிகு தமழ்நாடு முதரமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. தற்போது செயல்படுத்தப்பட்டுள்ள 144 தடை உத்தரவை பொதுமக்கள் தவறாது கடைபிடிக்க வேண்டும். பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதில் எந்தவித தொய்வும் ஏற்படக்கூடாது என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், அனைத்து விதமான அத்தியாவசியப் பொருட்களும் தங்குதடையின்றி கிடைக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் கரூர் மாவட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காலை நேரங்களில் உழவர்சந்தை, காமராஜர் நகர் மார்க்கெட் உள்ளிட்ட பகுதிகளில் காய்கறிகள் வாங்குவதற்காக அதிக அளவில் மக்கள் கூடுவதை தவிர்க்கவும், கொரோனா தொற்று பரவாமல் இருக்க சமூக விலகலை கடைபிடிக்கவும் ஏதுவாக பொதுமக்களின் வசதிக்கேற்ப கரூர் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் மைதானம், வெங்கமேடு எம்.ஜி.ஆர்.சிலை அருகில், குளத்துப்பாளையம் சாலை வாரச்சந்தை அருகில், பசுபதி பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில், காந்திகிராமம் மைதானம், கோவை சாலை வேலுச்சாமிபுரம், தாந்தோன்றிமலை அரசு கலைக்கல்லூரி முன்புறம், செங்குந்தபுரம் பிரதான சாலை ஆகிய 8 இடங்களில் வியாபாரிகள் காய்கறி கடைகள் வைத்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று முதல் கரூர் பேருந்து நிலையத்தில் தற்காலிகமாக 33 காய்கறி கடைகள் அமைக்கப்பட்டுள்ளது. பேருந்துநிலையத்தில் பேருந்துகள் நிறுத்தும் இடங்களில் வரிசையாக காய்கறிகடைகள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கடையின் முன்புறமும் வாடிக்கையாளர்கள் சமூக விலகலை பின்பற்றி நிற்கும் விதமாக சுமார் ஒரு மீட்டர் இடைவெளியில் வட்டங்கள் போடப்பட்டுள்ளது. இதனால், கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் தகுந்த இடைவெளியில் சமூக விலகலை பின்பற்றி வரிசையில் நின்று காய்கறிகளை வாங்கிச்செல்கின்றனர்.

அதுமட்டுமல்லாது, கரூர் நகராட்கிக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள காய்கறி கடைகளில் முகப்பு பகுதியில் காய்கறிகளின் விலைப்பட்டியல் வைக்கப்பட்டுள்ளது. இதனால் அதிக விலைக்கு காய்கறிகள் விற்கப்படுவது தடுக்கப்படுகின்றது. இந்த முயற்சி பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

பொதுமக்களுக்கு தேவையான மளிகைப்பொருட்கள், மருந்துபொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப்பொருட்கள் பிற மாவட்டங்களில் இருந்து கொண்டுவர வேண்டும் என்றாலும்

அதற்கான உதவிகளை செய்துதர அரசு தயாராக உள்ளது என்ற விபரம் அனைத்து வியாபாரிகள் சங்கத்தினரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கரூர் மாவட்டத்தில் பொதுமக்களுக்குத் தேவைப்படும் எந்தவொரு அத்தியாவசியப் பொருளும் தங்கு தடையின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் இறைச்சிக்கடைகளில் அதிக கூட்டம் கூடுவதை தவிர்க்க கடைகளின் முன்புறம் தடுப்பு அமைத்து பொதுமக்கள் சமூக விலகலை கடைபிடித்து இறைச்சியினை வாங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப்பணிகளை கண்காணிக்க சம்மந்தப்பட்ட பகுதிகளின் பொறுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமூக விலகலை அனைவரும் பின்பற்றினால் கொரோனா தொற்றில் இருந்து நம்மை தற்காத்துக்கொள்ளலாம். கொரோனா தொற்றை தடுக்கும் நடவடிக்கைகளில் பொதுமக்களின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமானதாகும். எனவே, பொதுமக்கள் அனைவரும் சமூகத்தின் நலன் கருதி தமிழக அரசு தெரிவிக்கின்ற அனைத்து உத்தரவுகளையும் முறையாகப்பின்பற்றிட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.பாண்டியராஜன், நகராட்சி ஆணையர் திருமதி.சுதா, அரசு போக்குவரத்துக்கழக பொது மேலாளர் திரு.குணசேகரன், கரூர் வட்டாட்சியர் திருமதி.அமுதா உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்